சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அ.வ.எண். 313/2018

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் பி.வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சோன்ராஜ் | வயது | 25 |
| த/பெ | மோகன்தாஸ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | தாசம்பாளையம் ( மணி நகர்) | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | சொந்த தொழில் |

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :

தாவா சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்றால் இல்லை. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பாவும் பாத்தியப்பட்டது. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்று காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. அது புறம்போக்கு நிலமாக இருப்பதால் தான் என்னால் ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்தின் வடக்கு பகுதியில் தான் எங்களுடைய வீடு உள்ளது என்றால் சரி தான். எங்களுடைய வீட்டின் பிரதான நுழைவு வாயில் வட புறமாகத் தான் உள்ளது என்றால் சரி அல்ல. தாவா சொத்து வழியாகத் தான் உள்ளது. எங்கள் வீட்டிற்கு ஜெகநாதன் Layout மூலமாக வருவதற்கு தான் வழி உள்ளது என்றால் சரி அல்ல. அது வேறு நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட வீடுகளுக்கான வழி ஆகும். அவ்வாறு வாடகைக்கு விடப்பட்ட வீடுகளும் எங்களுக்கு சொந்தமானவை என்றால் சரி தான். அந்த வாடகை வீடுகள் எந்த புல எண்களில் உள்ளன என்றால்

புல எண்கள் 99, 101 மற்றும் 102 என நினைக்கிறேன். சரியாக தெரியவில்லை. வாடகை வீடுகள் எங்களுக்கு அரசாங்கம் எழுதி கொடுத்த பட்டா படித் தான் பாத்தியம் என்றால் சரி அல்ல. கிரைய பத்திரப் படி பாத்தியம். அந்த சொத்தை யாரிடம், யார் பெயரில் எந்த வருடம் கிரையம் வாங்கினோம் என்று தெரியுமா என்றால் கிருஷ்ணசாமி கவுண்டர் 1981 வருடம் எனது தாத்தா ராமச்சந்திரன் கிரையம் வாங்கினார். 1993ம் ஆண்டு எனது தாத்தா அந்த சொத்தை எனது அப்பாவிற்கு தான செட்டில் மெண்டாக எழுதிக் கொடுத்தார். அந்த சொத்தின் அளவுகள் நினைவு உள்ளதா என்றால் இல்லை. கிரைய ஆவணத்தையும், தான செட்டில் மெண்ட் ஆவணத்தையும் என்னால் தாக்கல் செய்ய முடியும். தாவா சொத்தின் அளவுகள் தெரியுமா என்றால் தற்போது நினைவு இல்லை. தாவா சொத்து என்ன நிலையில் உள்ளது என்றால் வாதி எங்களை அனுபவிக்க விடாமல் பிரச்சனை செய்து வருகிறார்கள். தாவா சொத்து வண்டி பாதையாக உள்ளது. தாவா சொத்துக்கு தற்போது B மெமோ செலுத்தி வருகிறோமா என்றால் 2017 ஆண்டிற்கு பிறகு B மெமோ நிறுத்தி விட்டார்கள். மீண்டும் B மெமொ செலுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனது அப்பாவின் உடல் நிலை சரியில்லாததாலும் குடும்பத்தில் நிறைய பிரச்சனைகள் இருந்ததாலும் நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுவாக வழித் தடத்திற்கு B மெமோ போடமாட்டார்கள் சரி அல்ல. என்னுடைய தாத்தா அந்த வார்டின் கவுன்சிலராக இருந்தார் என்றால் சரி தான். ஆனால் எந்த வருடம் இருந்தார் என்று தெரியாது. எனது தாத்தா கவுன்சிலராக இருந்ததால் அரசியல் செல்வாக்கு , அரசு அதிகாரம் இருந்தது என்றால் எனது தாத்தா கம்யூனிஸ்ட் கட்சியில்

இருந்ததால் எந்த செல்வாக்கையும் பயன்படுத்தமாட்டார்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா. கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.